**தென்னை ஆராய்ச்சி சபை - 2013**

தென்னை ஆராய்ச்சி சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 43 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கிண்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (எஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை மேற்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி, அல்லது தவறுகளின்

காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபை நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக்கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கையின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

-----------------------------

### 2.1 அபிப்பிராயம்

--------------------

நிதிக்கூற்றுக்களானவை தென்னை பயிர்ச்செய்கை சபையின் 2013 இன் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

-----------------------------------------------------------------

**நியம இலக்கம் 01**

-------------------------------

நியமமொன்றினால் இடமளிக்கப்படாத சந்தர்ப்பமொன்றைத் தவிர்த்து வருமானம் மற்றும் செலவினங்கள் ஒன்றுக்கொன்று எதிராக ஈடுசெய்ய முடியாத போதிலும், சபையின் விற்பனை நிலையத்தில் ரூபா 3,869,548 வருமானத்திற்கு எதிராக ரூபா

1,120,673 தொகையான செலவினங்கள் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 11,560,125 இற்கு எதிராக அதனுடன் தொடர்புடைய செலவினங்கள் ரூபா 2,896,530 ஈடுசெய்யப்பட்டு தேறிய விளைவு நிதி செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக மானியமாக பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியில் கட்டியெழுப்பப்பட்டுள்ள சொத்துக்களை சரியாக இனங்காண்பதற்கும் அச் சொத்துக்களின் தேய்வுப் பெறுமதிகளை பெறுமானத் தேய்விடுவது தொடர்பிலும் சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான துன்கன்னாவ மற்றும் மித்தெனிய ஆகிய தோட்டங்களின் உயிரியல் விஞ்ஞான சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாமலிருந்ததுடன் அதற்குப் பதிலாக 2012 ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 175,800 கணக்குகளில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(இ) 05 ஏக்கர் விசாலமான தம்போவ விவசாயப் பண்ணைக் காணியின் பெறுமதியானது மதிப்பிடப்பட்டு சொத்தொன்றாக சபையின் கணக்கு ஏடுகளில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டில் சபையின் நிதி விளைவுகள் ரூபா 40,702,143 மிகையொன்றானதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டில் ரூபா 59,537,758 பற்றாக்குறை ஆனமையால் நிதி விளைவுளில் ரூபா 100,239,901 அதிகரிப்பொன்று காணப்பட்டது. மீளாய்வாண்டின் வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 117,889,178 ஆல் அதிகரித்திருந்தமை இதற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் பெறப்பட்ட வருமானத்தில் 67 சதவீதமானது செயற்பாட்டுச் செலவினங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) சபையின் ஒட்டுமொத்த வருமானத்தின் 60 சதவீதமானது செயற்பாட்டு நடவடிக்கைகளினாலும் 40 சதவீதமானது அரச மானியங்களின் மூலமாகவும் ஈட்டப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

வெலிகம இலை பழுதடைதல் மற்றும் வாடுதல் நோய்க்காரணியாக அறியப்படும் பயிடோப்லாஸ்மாவினை கண்டறியக்கூடிய விசேட ஆர்ரீபிசீஆர் இயந்திரமொன்று 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 6.3 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 07 மாதகாலமாக இரசாயனப் பொருட்களின்மை காரணமாக மாதிரிப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெங்கு மயிட்டா சேதத்தினை உயிரியல் விஞ்ஞான ரீதியாக கட்டுப்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் எதிர்ப்பு மயிட்டாக்களை களத்திற்கு விடுவிக்கும் செயன்முறையொன்று நடைபெற்றிருந்தது. மயிட்டாக்களை உருவாக்கி பரவலாக்கும் பொருட்டு 12 உற்பத்தி ஆய்வு கூடங்கள் 07 மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) எதிர்ப்பு மயிட்டாக்களின் உற்பத்தியின் போது பொலிபிரோப்லின் பக்கற்றுக்களில் முதலில் சுமார் 25 மாற்று மயிட்டாக்கள் மற்றும் அவசியமான உணவினைச் சேர்த்து 6 கிழமைகள் வைக்கப்படும் வேளையில், இதன் போது மயிட்டாக்கள் பெருக்கமடைந்து ஒரு பக்கற்றில் சுமார் 5,000 மயிட்டாக்கள் வரை உருவாகியதன் பின்னர் அவை களத்திற்கு விடுவிப்பதற்கு பொருத்தமானவையாக கருதப்படும். இப் பக்கற்றுக்கள் 6-8 தினங்களில் விடுவிக்கப்பட வேண்டியுள்ளதுடன் அவ்வாறு தவறுமிடத்து அப்பக்கற்றுக்களிலுள்ள

எதிர்பு மயிட்டாக்களை புதிய பக்கற்றுக்களின் உற்பத்திக்கு ஈடுபடுத்த முடியும். இதன் நிமித்தம் பக்கற்றுக்களில் உற்பத்தித் திகதி குறிப்பிடப்பட வேண்டியுள்ள போதிலும் அவ்வாறு குறிப்பிடப்படாமையினால் களத்திற்கு விடுவிப்பதற்கு பொருத்தமானவை மற்றும் புதிய பக்கற்றுகளின் உற்பத்திக்கு ஈடுபடுத்தக் கூடிய பக்கற்றுகள் எவையென இனங்காணப்பட முடியாதிருந்தது.

(ii) மயிட்டா நோய் பரவியிருந்த பாரிய தென்னை மரங்களின் தொகையொன்று 2014 யூன் 10 இல் அம்பகெல மரபணு வளங்கள் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது காணக்கூடியதாக இருந்தமையுடன், எதிர்ப்பு மயிட்டாக்களை மரங்களில் தாபிப்பதற்காகச் செலவிடப்பட வேண்டியேற்படுகின்ற கிரயத்தினையும், அவற்றை மூன்று மாதங்களுக்கொருமுறை தாபிக்க வேண்டியுள்ளமை போன்ற காரணங்களினால் இந் நோயினை இல்லாதொழிக்க முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த எதிர்ப்பு மயிட்டா பக்கற்றுக்களை தென்னை மரங்களில் தாபிப்பதற்கு இயந்திர முறையொன்றினைப் பின்பற்ற எண்ணியிருந்ததுடன் பின்வரும் காலங்களில் இவ் அசௌகரியங்கள் நீங்குமென இது தொடர்பில் சபையின் தலைவரினால் பதிலுரைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக உள்நாடு மற்றும் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கின்ற மானியங்களிலிருந்து உரிய செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படாது சேமிக்கப்படுகின்ற பணம் அந்த செயற்பாடுகளுக்காக பயனுள்ளதாக ஈடுபடுத்துவதற்கோ அல்லது மீளளிப்பு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்ட பணம் ரூபா 6,897,514 ஆகும்.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 390 ஆக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணியினர் 299 ஆகும். செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு உரியதாக சிரேஷ்ட, மூன்றாம் மற்றும் இரண்டாம் நிலைகளில் பதவிகள் முறையே 09, 20 மற்றும் 47 ஆகவும் ஆரம்ப நிலை பதவிகளில் 22 வெற்றிடங்களும் காணப்பட்டன. 07 உத்தியோகத்தர்களின்

பதவிகள் அவர்களுக்கு பிரத்தியேகமாகவும் அவர்கள் சேவையிலிருந்து நீங்குமிடத்து இரத்தாகும் வகையிலும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2011 ஆம் ஆண்டில் பிரதி பணிப்பாளர் (நிருவாகம்) மற்றும் சிரேஷ்ட கணக்காளர் பதவிகளுக்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2014 மே 30 ஆந் திகதி வரை அப் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2013 மார்ச் 05 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 10,089,000 தொகையான கணக்கீட்டுக் குறைபாடுகள் சபையின் தலைவரினது அவதானத்திற்குட்படுத்தப்பட்டது. அக் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2013 திசெம்பர் 26 அத் திகதி மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) மனிதவள முகாமைத்துவம்

(இ) பயிர்ப் பாதுகாப்பு